ஒரு சிறிய தவறு

ராகவலு இதுவரைக்கும் பள்ளிக்கூடத்துக்குப் போனதே இல்லை. அவனுடைய ஆட்டபாட்டங்கள் எல்லாம் வீட்டுக்குள்ளரயே தான். அவனுக்கு ஐந்து முடிந்து ஆறு நடக்கிறது. மெலிந்து காணப் படுவான். ரொம்பவும் பயந்த சுபாவம். எதையுமே மருண்ட பார்வை யாகத்தான் பார்ப்பான். நீண்டமுகம். தலை கனமாகவும் உடம்பு குச்சியாகவும் இருப்பதால் அவனைப் பார்க்கும்போது குண்டூசியின் ஞாபகம்தான் வரும்! வேகமாக அவன் ஓடும்போது எங்கே கீழே விழுந்து விடுவானோ என்று, பார்க்கிறவர்களுக்குப் பயமாக இருக்கும். கணீரென்ற குரல். அந்த மெலிவிலும் அவனுடைய கழுத்தில் சதை மடிப்பின் வரிகள் விழுந்திருப்பதுவும் ஒரு அழகாகவே இருக்கும். ஒட்ட வெட்டப்பட்ட கிராப்பு. நெற்றிமேட்டின் வலது பக்கத்தில் ஒரு சுழி. குளுமையான, அகன்ற பேசும் கண்கள்.

ராகவலு இரண்டாவது பையன். மூத்தவன் பள்ளிக்கூடம் போகிறான். இளையவன் ராகவலு வீட்டிலே செய்யும் 'மணியத்'தையும் 'அத்துவான'த்தையும் பெற்றவர்களால் தாளமுடியவில்லை. எப்படி யாவது இவனைப் பள்ளிக்கூடத்தில் போடவேண்டும் என்று தீர்மானித்துவிட்டார்கள்.

ராகவலுவை இதற்காகத் தயார் செய்தார்கள். பள்ளிக்கூடத்தில் நிறையப் பிள்ளைகள் இருப்பார்களென்றும் அவர்களோடு சந்தோஷ மாக விளையாடலாமென்றும் வாத்தியார் நல்லகதைகளாய்ச் சொல்லு வாரென்றும், நல்ல பிள்ளைகளுக்கு, வாத்தியார் கருப்பட்டிகூட வாங்கிக்கொடுப்பார் என்றும் சொல்லப்பட்டது. ராகவலு ஒருகணம் அந்தக் கருப்பட்டியின் இனிப்பிலும் மணத்திலும் மெய்மறந்தான். பிறகு படீரென்று 'யம்மா, எனக்கு இப்போ திங்கக் கருப்பட்டி கொடேன்; திங்கணும்போல இருக்கு' என்று கேட்டான்; அதைக் கேட்ட அவனுடைய தாய் ஜானகி 'கலகல'வென்று சிரித்தாள்.

ராகவலு பள்ளிக்கூடம் போனான்.

ஒரு பழைய 'பைக்கட்டில்' ஏதோ ஒரு பழைய வாரப் பத்திரிகை யைப் புஸ்தகத்துக்குப் பதிலாகப் போட்டுக்கொடுத்தார்கள். உடைந்து போன ஒரு சிலேட்டு. அதில் நாலு பக்கமும் சட்டம் மட்டிலும் உறுதி யாக இருந்தது. உடைந்துபோய்விட்டது போக பாக்கி ஒரு சில்லு ஒரு மூக்கில் ஒட்டிக்கொண்டிருந்தது. அதை ஊமத்தை இலையாலும் கரி யாலும் தேய்த்து நன்றாய்க்கழுவித் துடைத்துப் பைக்கட்டுக்குள் போட்டுக்கொடுத்தார்கள். குச்சி மாத்திரம் புதுசு; நீட்டமான உருண்டையான யானைக்குச்சி.

பள்ளிக்கூடம் புறப்படும்முன் தலை, முகம், கை, கால் எல்லாம் குளூர எண்ணெய் தேய்த்துத் தலையைப் 'பாவாடை' எடுத்துச்சீவி, சாந்துப் பொட்டிட்டார்கள். போகும்போது தின்றுகொண்டே போக வறுத்த காணப்பருப்பும் குருதவாலி புழுங்கலரிசியும் கலந்து நனையப் போட்டது, சட்டைப் பை நிறையப் போட்டு அனுப்பினார்கள்.

தின்றுகொண்டே ராகவலு தன் அண்ணனோடு அந்தக் கிராமத் தின் தெருக்காட்சிகளைப் பார்த்துக்கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் போனான்.

கிட்ணசாமிப்பட்சி ஒரு கோழிக்குஞ்சை எடுத்துக்கொண்டு பறந்தது. அந்தக் கருடனின் விரல்களுக்கிடையில் சிக்கிய கோழிக்குஞ்சு 'கிய்யா கிய்யா' என்று கத்திக்கொண்டே போனது. பெரியவர்களும் 'கிட்ணசாமியை' 'ஹோ, ஹோ' என்று சத்தம் கொடுத்துத் துரத்திக் கொண்டு அதன் பின்னால் ஓடினார்கள்.

ஒரு இடத்தில் தெருச் சகதி அகலமாகப் பரவியிருந்ததால் ராகவலு வால் தாண்டமுடியவில்லை; சுற்றிப் போகவேண்டியிருந்தது.

படப்புக் காடுகளில் மேய்ந்துகொண்டிருந்த பன்றிக்குட்டிகளின் மீது மாடுமேய்க்கும் சிறுவர்கள் நாய்களை உஸீக்காட்டிப் 'பிடீஸ்' 'பிடீஸ்' என்று துரத்திக்கொண்டு ஓடினார்கள்.

ராகவலுவைக் 'குட்டி பாலர் வகுப்'பில் உட்கார வைத்தார்கள் வகுப்பில் கொஞ்சநேரமே உட்காரமுடிந்தது அவனால். பக்கத்தில் வரிசையாயிருந்த பூச்செடியின் மலர்கள் அவனை வா வா என்று அழைத்தன. மெல்ல எழுந்திருந்து அதன்கிட்டே போய் இமைக்காமல் அதையே பார்த்துக்கொண்டிருந்தான். ஆசைப்பட்டு ஒரு பூவைப் பறித்தான். அப்பொழுது அவனுக்கு பின்னால் இடிமுழக்கம்போல் ஒரு உறுமல் கேட்டது. கையில் பிரம்புடன் 'ருத்ராவதார'மாக வாத்தியார் நின்று கொண்டிருந்தார். குழந்தையின் கையிலிருந்து பூ நழுவி மண்ணில் விழுந்தது. ராகவலுவின் குளுமையான கண்களிலுள்ள ஈரப் பசை வற்றிவிட்டது. உடம்பு கிடுகிடு என்று நடுங்கியது. வாத்தியார் பிரம்பால் ஓங்கி ஏதோ சொன்ன ஒலியை அவனால் கேட்க முடியவில்லை. அந்த 'பச்சை மண்'ணின் கண்கள் நிலைக்குத்தியபடியே வாத்தியாரைப் பார்த்துக்கொண்டிருந்தது. அவன் திடீரென்று 'அம்மா......' என்று கூவிக்கொண்டே அந்தப் பூச்செடியைச் சேர்த்து அணைத்துக்கொண்டான்.

நிகழ்ச்சி இப்படியாக முடியும் என்று நினைக்கவில்லை வாத்தியார். அவர் 'கற்ற வித்தை' அவ்வளவுதான். ராகவலுவைப் பையன்கள் வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு போகும்போது அவனுடைய உடம்பு அனலாகச் சுட்டது.

❐

ராகவலுவைப் போலவே அவனுடைய அன்னை ஜானகியும் பயந்த சுபாவம் உடையவளே. ராகவலு அப்பொழுது அவளுடைய வயிற்றில் ஏழுமாசம். அது கோடைகாலம், ஒரு நாள், ஜானகி பட்டக சாலையிலுள்ள ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு, கால் பெருவிரல் நுனியைத் தரையில் பட்டதோ, படவில்லையோ என்று வைத்து, லேசாய் ஆடிக்கொண்டே 'சோகமான' சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

வயிற்றுக்குள் குழந்தை சுற்றிச்சுற்றி 'முண்டி' விளையாடிக்கொண்டிருந்தான். வெளியே மழை தூறிக்கொண்டிருப்பது ஜன்னல் வழியாகத் தெரிந்தது. வயிற்றில் நிகழும் வேதனை இன்பத்தில் அவள் லயித்திருக்கும்போது வானத்திலிருந்து கண்விழிகளைப் பறிக்கும் வெண்மையான பேரொளி ஒன்று அவளுடைய வீட்டிலுள்ள ஒற்றைப் பனைமரத்தின் மீது இறங்கியது. பூமியே பிளந்துபடும் ஓசை ஒன்றும் அதே சமயத்தில் கேட்டது. ஊஞ்சலிலிருந்து ஜானகி நழுவி, 'அர்ஜுனன் பேர் பத்து....' என்று சொல்லிக்கொண்டே தரையில் விழுந்தாள்.

பனைமரம் பற்றி எரிந்து அதிலிருந்து பரவிய புகைக்குக் கணக்கு வழக்கில்லை. சில நேரங்கழித்து ஜானகியின் வயிற்றிலிருந்து ராகவலு பிறந்துவிட்டான்.

கைத்தண்டி இருந்த குழந்தையைப் பார்த்து ஊரே அதிசயப் பட்டது. குறைமாசமாகப் பிறந்த இந்தக் குழந்தை உயிரோடு இருக்குமோ என்று நினைத்தார்கள். ஆனால் அதற்குச் செய்ய வேண்டிய 'சாஸ்திரங்'களைச் செய்ய ஏற்பாடுகள் செய்தார்கள். வாழைத்தோட்டத்துக்கு ஆள் அனுப்பித் தினமும் ஒரு குருத்து இலை கொண்டு வரும்படிச் செய்தார்கள். அதை விரித்து விளக்கெண்ணெய் தடவி, பதினாறு மண் அகல்விளக்குகளை ஏற்றி அந்த வாழை இலை மேல் நீண்ட வட்டவடிவில் வைத்து அந்த வட்டத்துக்குள் குழந்தையை எண்ணெய் தடவிப் படுக்க வைத்தார்கள். இப்படி மூன்று மாதங்கள் அரங்கு வீட்டுக்குள் அந்தத் தீபங்களின் உஷ்ணத்துக்கு மத்தியில் குழந்தை, தூங்கியே வளர்ந்தது. தாயிடம் பால் சாப்பிடும் நேரம் தவிர.

இரவும் பகலும் தூங்காமல் குழந்தையின்கிட்டேயே இருந்து அந்த மூன்று மாதங்களும் ஜானகி அவனைக் கவனித்தாள். எல்லோரும் 'எண்ணெய்ச் செலவுதான், பிள்ளை பிழையாது' என்றுதான் சொன்னார்கள். ஆனால் ராகவலு பிழைத்துக்கொண்டான்.

❐

ராகவலுவைத் திரும்பவும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைக்கச் செய்த முயற்சிகள் எல்லாம் பயனற்றுப் போயின. பள்ளிக்கூடம் என்ற உடனேயே அந்த வாத்தியாரின் முகமும் பிரம்பும்தான் அவன் மனக்கண்முன் வந்து நிற்கும்.

பெயர் சேர்த்துவிட்டால் போய்விடுவான் என்று செய்து பார்த்தார்கள். புதுப் பைக்கட்டு, சிலேட்டு, புத்தகம் எல்லாம் வாங்கிக் கொடுத்துப் பார்த்தார்கள். எத்தனையோ ஆசை வார்த்தைகள் சொல்லிப் பார்த்தார்கள். நிதமும் அவனுடைய அம்மா அவனைக் கொண்டுபோய் விட்டுவிட்டு வருவாள். ஆனால் கொஞ்சநேரத்துக்கு எல்லாம் அவனைத் திரும்பவும் வீட்டில் பார்க்கலாம்! பயமுறுத்தியும் அடித்தும் பார்த்தார்கள். பட்டினி போட்டார்கள். ஒன்றிலும் பயன் இல்லை. என்ன செய்வதென்றே தெரியாமல் பெற்றவர்கள் பெருங் கவலைப்பட்டார்கள்.

ராகவலு இப்பொழுது ஒரு அனாதையைப்போல் ஆகிவிட்டான். இந்த சின்ன வயதில் இப்படி அவனுக்கு நேர்ந்திருக்கக்கூடாதுதான். அவனுடைய உள்ளம் சதா கருகிக்கொண்டே இருந்தது. அவனால் செய்ய முடிந்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான். நல்ல பிள்ளையைப்

போலக் காலையில் பள்ளிக்கூடம் புறப்பட்டுப் போவான். பள்ளிக் கூடம் ஆரம்பிக்கும் முன்னரே எங்கோ மாயமாய் மறைந்துவிடுவான்.

கிராமத்தில் பகலில் அனேகமாக வீடுகளில் ஒருத்தரும் இருக்க மாட்டார்கள். எல்லோரும் காட்டு ஜோலிகளுக்கு போய்விடுவார்கள். ராகவலு மனித சஞ்சாரமற்ற தெருக்களில் திருடனைப்போல் யார் கண்ணுக்கும் தட்டுப்படாமல் சுற்றி அலைந்துகொண்டே இருப்பான்.

அவனுடைய பைக்கட்டில் புஸ்தகம் அச்சுஅலங்காமல் அப்படியே இருந்தது. விடுமுறை நாட்களில் வீட்டில் அவனுடைய அம்மா பாடம் சொல்லிக்கொடுப்பாள். படம் பார்த்துப் பெயர் சொல்லும் பாடத்தில் அவனுக்கு அடி விழும். 'ஈ' என்று சொல்வதற்கு பதில் வண்டு என்று சொல்வான். 'ஈ இவ்வளவு பெரிசாக இருக்குமோ? இது வண்டுதான் பார்' என்பான் படத்தைக் காண்பித்து. அவன் சொன்னதும் உண்மை தான். படத்தில் ஈயை அவ்வளவு பெரிதாகப் போட்டிருந்தார்கள்.

பாடநேரத்தில் இல்லாத கேள்விகளையெல்லாம் கேட்டுத் துளைத்து எடுப்பான்.

'கோழி மட்டும் ஏன் முட்டை வைக்கிறது; சேவல் ஏன் முட்டையே வைக்கிறதில்லை?' என்றெல்லாம் கேட்பான்.

அம்மா முன்னைப்போலத் தன்மீது பிரியமாக இருக்கமாட்டாளா என்று ஏங்குவான். தன்மீது ஏன் எல்லாரும் எரிந்து எரிந்து விழுகிறார் கள் என்று அவனுக்குப் புரியவில்லை.

எப்போதாவது அம்மா அவனுக்குக் கதை சொல்லுவாள். கதை சொல்லும்போது அவன் அம்மாவின் முகத்தையே பார்த்துக்கொண்டி ருப்பான். அவளுடைய பற்களையும் சிகப்பு உதடுகளையும் பார்த்துக் கொண்டே இருக்கும்போது அவளுடைய மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டு முகத்தைப் பதித்துக் கழுத்தைச் சேர்த்துக் கட்டிக்கொள்ள வேண்டும்போலத் தோன்றும் இவனுக்கு. ஆனால் இப்பொழுதெல் லாம் அம்மா தன்பேரில் முன்னைமாதிரி பிரியமாக இல்லை என்று அவனுக்குத் தெரியும்.

ஒருநாள் அம்மா அவனைப் பள்ளிக்கூடம் போகாததால் அடித்துக் கொண்டிருந்தாள். அந்நேரம் அவர்களுடைய வீட்டுக்கு ஒரு தாத்தா விருந்தாடி வந்தார். 'அம்மா', பையனை இப்படி முரட்டுத்தனமாக அடிக்காதே, பருத்திமாரால் அடி, முழங்காலுக்குக் கீழே' என்று சொல்லிக்கொடுத்தார். அன்றிலிருந்து அம்மா அவனைப் பருத்தி மாரினால்தான் அடிப்பது.

❐

இதயத்தில் அந்தக் குழந்தை தாங்கமுடியாத வேதனையைச் சுமந்து கொண்டு தன் போக்காக அந்தக் கிராமத்தின் தெருக்களில் வளைய் வந்துகொண்டிருந்தான். தன்னுடைய சேக்காளிகளும் கூட்டாளிகளும் தன்னை தன் தாயிடம் பள்ளிக்கூடம் போகாத நாட்களில் காண்பித்துக்கொடுத்து அடி வாங்கிகொடுப்பதால் அவர்களிலிருந்தும் தனிமைப்பட்டுப் போனான். வராத பிள்ளைகளைப் பெரிய பையன் கள் பள்ளிக்கூடத்துக்குத் தூக்கிக்கொண்டு போய்விடுவார்களாதலால் எந்நேரமும் உஷாராய் இருக்கவேண்டியதிருந்தது.

ஒரு தெருவின் வழியாக ராகவலு போய்க்கொண்டிருந்தபோது தேக்கு மரத்தைச் செதுக்கும் மணம் 'கெம்'மென்று வந்துகொண்டிருந்தது. அந்த வாசனையை அவன் மூக்கு நிறைய இழுத்துச் சுவாசித்தான். அங்கே ஒரு புதுவீடு கட்டிக்கொண்டிருந்தார்கள். அவன் அந்த வீட்டுக்குள் நுழைந்தான். அந்த வீட்டுக்குக் கதவுகளோ, ஜன்னல்களோ இன்னும் போடப்படவில்லை. தரை எத்து குத்தலுமாக இருந்தது. ஆசாரியும் அவருடைய பையனும் தச்சு வேலையை மும்முரமாகச் செய்துகொண்டிருந்தார்கள். அந்த ஆசாரி தன்னுடைய வலது காதில் ஒரு பென்சிலைச் சொருகிக்கொண்டிருந்தார். துளை உளியின் உச்சியில் அவர் ஒரு சிரட்டையைக் கவிழ்த்தி அமுக்கிப் பிடித்துக் கொண்டிருக்க, அவருடைய பையன் கயிற்றின் இரு நுனிகளையும் பிடித்துச் சரசரவென்று மாறிமாறி இழுத்துக்கொண்டிருந்தான். வைத்த கண் வாங்காமல் ராகவலு அதைப் பார்த்துக்கொண்டிருந்தான். ராகவலுவைப் பார்த்து அந்தப்பையன் ஒரு நட்புப் புன்னகை செய்தான். ராகவலுவும் பதிலுக்குச் சிரித்தான். இந்த நிகழ்ச்சியினால் தூண்டப்பெற்ற ஆசாரியும் ராகவலுவைப் பார்க்காமலேயே அரை குறைத் தெலுங்கில் 'என்ன முதலாளி! பள்ளிக்கூடத்துக்குப் போகலையா?' என்று கேட்டார். ராகவலு அதற்கு பதில் சொல்லாமல் அங்கே சுருள்சுருளாகச் செதுக்கிக் கிடக்கும் மரச் செதுக்கல்களை இரண்டு கைகளாலும் அள்ளி அள்ளிப் பார்த்தான். 'கொஞ்சம் விளையாட எடுத்துக்கொண்டு போவமா' என்றுகூட யோசனைதான். ஆனாலும் அவர்கள் என்ன நினைப்பார்களோ என்று தயங்கினான்.

அங்கிருந்து புறப்பட்டு, வருகிற வழியில் ஒரு மாட்டுக்கு லாடம் கட்டிக்கொண்டிருந்தார்கள். அதைக் கொஞ்சநேரம் பார்த்துக் கொண்டிருந்தான். வயிற்றில் ஒரே சுற்றுக் கயிற்றால் இறுக்கி மாட்டை விழத்தட்டுவதும், அதிதுரிதமாக நாலு கால்களையும் பிணைத்துக் கட்டுவதையும், குளம்புகளைத் தறித்து 'சைய்ஸ்' செய்து லாடங்கள் வைத்து அதற்கு வலிக்காமல் ஆணிகள் அடிப்பது எல்லாவற்றையும் பார்த்தான். மாட்டைப்புரட்டி மறுபக்கம் போடும்போது ஒருத்தருக்கும் தெரியாமல் ஒரு பழைய லாடம் ஒன்றை எடுத்துப் பாக்கெட்டுக்குள் போட்டுக்கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

கம்மாய்க்கரை வந்தடைந்தான். கம்மாயில் தண்ணீர் நிறைந்திருந்தது. அதில் இறங்கி ராகவலு விளையாட ஆரம்பித்தான், மேலே அத்தி மரத்திலிருந்து ஒரு இலை தண்ணீரின்மேல் உதிர்ந்தது. அந்த இலையை எடுக்கக் கையை நீட்டினான். அது எட்டவில்லை. அதை எடுக்கத் தண்ணீருக்குள் இறங்கினான். இன்னும் ஒரு எட்டுத்தான் எடுத்து வைக்கவேண்டும். அது, யானை முங்கும் அளவு ஒரு குழி, அதில் விழுந்து எத்தனையோ குழந்தைகள் உயிரை விட்டிருக்கிறார்கள். கங்கை அவனையும் இழுத்து அரவணைக்கத் துடித்தாள். அந்தச்சமயம் ஒரு பெண்ணின் சிரிப்புச் சப்தம் கேட்டது. ராகவலு திரும்பிப் பார்த்தான். விடலைப் பருவமுள்ள ஒரு குழுவச்சியை ஒரு குழுவன் விரட்டிப் பிடித்துக்கொண்டிருந்தான். குழுவனின் பிடியில் சிக்கிக் கொண்ட குழுவச்சி திமிறினாள். குழுவன் குழுவச்சியை இட்ட முத்தமே இந்தக் குழந்தையின் உயிரைக் காப்பாற்ற உதவியது! ராகவலு பயந்துபோனான். அவன் இப்படிப் பார்த்ததில்லை! அங்கிருந்து

ஓட்டம் பிடித்தான். ஒரு தரம் இடறிக் கீழே விழுந்தான். எழுந்து திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஓடினான்.

அவன் வீட்டுக்குள் நுழைவதற்கு முன்னாலேயே, இன்று காலையிலிருந்து அவன் பள்ளிக்கூடத்துக்கு வரவே இல்லை என்ற தாக்கல் வந்திருந்தது. ஜானகி நல்ல நீளமான பருத்திமார் ஒன்றை எடுத்து வைத்துவிட்டு, அம்மியில் துவையல் அரைத்துக்கொண்டிருந்தாள். வீட்டுக்குள் ராகவலு வேகமாய்ப் புகுந்தான். ஜானகி எழுந்திருந்து கதவை அடைத்துவிட்டு கையில் பருத்திமாருடன் அவன் கிட்டே வந்தாள்.

'எங்கேடா போனே இத்தனை நாழி?'

'பள்ளிக்கூடத்திலேதாம்மா இருந்தேன்...'

'பொய் வேறே; பொய் வேறே சொல்றாயா...'

என்று சொல்லிக்கொண்டே அடி 'சக்கையைப் புரட்டி'னாள்.

அவளுடைய கண்களைப் பார்க்கப் பயமாக இருந்தது. உச்சஸ்தாயியில் கீச்சுக்குரலில், 'போவயா, போவயா, இனிமேப் பள்ளிக்கூடம் போவயா...' என்று சொல்லிக்கொண்டே 'ரவை ரவையாய்'ப் பிய்த்து வாங்கினாள். ராகவலு அவன் தாயிடம் இவ்வளவு பயங்கரமாக அடிபட்டதில்லை. அவனுடைய கால்களிலிருந்தும் முதுகிலிருந்தும் இரத்தம் கொட்டியது. ஜானகி மேலும் மேலும் அடித்துக்கொண்டே இருந்தாள். தான் அலுத்துப் போகுவம்வரை அடித்தாள்.

'போவயா... இனிமேலாவது பள்ளிக்கூடம் போவயா? போவயா, போவயா....?'

தன்னுடைய புஜத்திலிருந்து வழியும் இரத்தத்தைத் துடைத்துக்கொண்டு ராகவலு அழுதுகொண்டே, 'அம்மா....அம்மா, என்னைப் பள்ளிக்கூடம் போகச் சொல்லாதேம்மா; என்னைப் பள்ளிக்கூடத்துக்கு மட்டும் போகச் சொல்லாதேம்மா....' என்று இரத்தம் பட்ட இரண்டு கைகளையும் தன் தாயை நோக்கி உயர்த்திக்கொண்டே புலம்பினான்.

ஜானகியின் கையிலிருந்த பிய்ந்துபோன பருத்திமார் நழுவிக் கையிலிருந்து கீழே விழுந்தது. அவளுடைய கண்களில் நீர் நிறைந்துவிட்டது.

முன்னால் நீண்ட விரிந்த கைகளோடு மெல்லடி எடுத்து வைத்து, அரைப் பிரக்ஞையோடு அவன் 'அம்மா...அம்மா...' என்று ஏங்கிக்கொண்டே தன் தாயை நோக்கி வந்தான்.

◆

தீபம்
பிப்ரவரி - 1968